திரு. ஏ. சுப்பிரமணியம் : இப்பொழுது மாணவர்களுக்கு போக்கு வரத்தை ஒழுங்குபடுத்தும் பயிற்சி எல்லாம் புதியதாக அளிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, அதே அடிப்படையில் முதல் உதவித் திட்ட பயிற்சியைக் கொஞ்சம் விரிவுபடுத்தி, அதிலும் மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கு வழி செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலில் குறிப் பிட்டபடி என்.ஸி.ஸி. பிரிவு, ஸ்கவுட்ஸ் பிரிவு இதில் சேர்ந்திருக்கும் மாணவர் களுக்கு இந்தப் பயிற்சி கட்டாயமாக சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகிறது. சில பள்ளிகளில் அவர்களே முயற்சி எடுத்து, முதல் உதவிப்பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது. கேள்வி எல்லாப் பிள்ளைகளுக்கும் கட்டாயமாகச் சொல்லிக் கொடுக்கப்படுமா என்பது தான். அதற்கான செயற்குறிப்பு எதுவுமில்லை. சில பள்ளிகளில் அவர்களே முன்வந்து இந்தப் பயிற்சியைச் சொல்லித் தருகிறார்கள்.

திரு. கே. ஏ. வகாப் : இப்பொழுது பள்ளிகளில் சாரணர் இயக்கம் அதிகப் படியாகச் செயல்படுத்தப்படாத நிலையில் இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட முதல் உதவிப் பயிற்சி தருகிற விதத்தில் சாரணர் பயிற்சி பெறுகின்ற மாணவர்களை இன்னும் அதிகப்படியாகச் சேர்ப்பதற்கு ஏதேனும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எல்லா உயர்நிலைப் பள்ளி களிலும் சாரணர் இயக்கம் அமைக்க வேண்டும் என்ற ஒரு நோக்கம் உண்டு. அதற்கான முயற்சியை சாரணர் இயக்கம் எடுத்து வருகிறது.

மாலைநேரக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள்

*** 209 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாலைநேரக் கல்லூரிகளில் பட்டப் பிற்காலப் படிப்பு (Post-Graduate Course) இவ்வாண்டு துவக்கப்பட்டு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : மாலை நேரக் கல்லூரிகளில் பட்டப் பிற்காலப் படிப்பு (போஸ்டு கிராஜுவேட் கோர்ஸ்) இனிமேலாகிலும் துவக்கி நடத்து வதற்கு அரசு ஆலோசிக்குமா? இதுவரையில் மாலைநேரக் கல்லூரிகளில் எந்த வகையான பட்டங்கள் தரப்படுகின்றன என்று அறிய இயலுமா?

1973 மார்ச் 2]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாலைநேரக் கல்லூரிகளில் பெரும்பாலும் கலை இயல் பட்டங்கள் கொடுப்பதற்கு பட்டப்படிப்பு வரை யிலும் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. மேற்கொண்டு பட்டப் பிற்காலப் படிப்பு கொண்டு வரவேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருகிறது. அதைப் பற்றி பல்கலைக்கழகம் முடிவு செய்ய வேண்டும். சென்ற ஆண்டு கேட்டார் கள். சென்ற ஆண்டு காலத் தாழ்வு ஏற்பட்டுவிட்டது. அடுத்த ஆண்டு அதற் கான வாய்ப்புக்கூறுகள் இருக்கின்றனவா என்பதைப்பற்றி பரிசிலிக்கும்படி யாக பல்கலைக்கழகத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மேல்பட்டப் படிப்பு ஆர்ட்ஸ் ஸப்ஜெக்ட் என்று மட்டும் இல்லாமல் மற்ற ஸப்ஜெக்ட்களிலும் படிக்க வேண்டும் என்ற பரிந்துரையை அரசாங்கம் யூனிவர்ஸிடியிடம் சொல்லுமா? அப்படி இருந்தால் அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கலை இயலைத் தவிர மற்ற அறிவு இயல் பகுதிகள் முதலில் புகுமுக வகுப்பில் கொண்டுவரப்பட்ட பிறகு பட்டப் படிப்புக்குக் கொண்டு வரப்படுவது பற்றி யோசிக்கப்பட வேண்டும். கலை இயலில் மேல் பட்டப்படிப்பு புகுத்தப் படாததற்குக் காரணம், அதற்கு வேண்டிய வாய்ப்பு வசதிகள் இல்லை. மேல்பட்டப் படிப்புக்கு வருகின்ற மாணவர்கள் இரவு 8, 9 மணி வரையில் ஆய்வுக் கூடங்களைப் பயன்படுத்தி வருகிறார்கள். அதற்கான வாய்ப்பு பெருகியிருக்கிறதா என்று பல்கலைக்கழகம் கூறவேண்டும். முதலில் புகுமுக வகுப்பில் புகுத்துவதுபற்றி ஆலோசிக்க வேண்டும். அது பற்றி சிந்திக்கும்படியாக பல்கலைக்கழகம் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: மாலை நேரக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் எண்ணிக்கை எவ்வளவு? அவர்களுக்கு இன்னும் தேவைக்கேற்ற அளவில் இடத்தை அளிப்பதற்கு அதற்கான வசதிகளைச் செய்து கொடுப்ப தற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது ஏறத்தாழ 9,000 பேர் மாலைநேரக் கல்லூரிகளில் மாநிலம் எங்கும் படிக்கிறார்கள். ஆகவே, இதை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புக்கூறுகள் ஆண்டிற்காண்டு பரிசிலிக்கப்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : இந்த மாலைநேரக் கல்லூரிகளில் பாலிடெக்னிக் கோர்ஸ், அதாவது எல்.ஸி.ஈ., எல்.ஈ.ஈ.-க்கு மேல், பட்டப் படிப்புக்குச் சேருவதற்கு 5 ஆண்டுகளுக்கு சர்வீஸ் செய்திருக்க வேண்டும் என்று இருப்பதை மாற்றி, இவர்கள் படிப்பு முடிந்தவுடனேயே மாலைநேரக் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதுபற்றி பல்கலைக்கழகம் முடிவு செய்ய வேண்டும். பல்கலைக்கழகத்திலிருந்து இந்தக் கருத்துரை அனுப்பப் விரும்புகிறேன்.

திரு. ப. முத்துசாமி : மாலைநேரப் படிப்பு சொல்லித்தருகிற முறை மதுரை பல்கலைக்கழகத்தில் நடைமுறையில் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சில கல்லூரிகளில் இருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் விவரம் திரட்டித் தரப்படும்.

திரு. என். கிட்டப்பா : மாலைநேரக் கல்லூரிகளில் சேர்ந்து பயிலுவதற்கு வயது வரம்பு ஏதேனும் உண்டா என்பதையும், அரசாங்க அலுவல்களில் உள்ளவர்கள் மட்டுமல்லாமல், வெளியே உள்ளவர்களும் அதிலே சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்பு ஏதுவும் ஏற்படுத்தித் தரப்படுமா என்பதனையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது ஓரளவுக்கு குறிப்பிட்ட இடங்கள் இருக்கின்றன. அதன் காரணமாக அரசாங்கத்தில் பணி புரிபவர்களுக்குத்தான் முக்கியத்துவம் தரப்படுகிறது. இதனுடைய இடங்கள் பெருகி, வெளியே இருப்பவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம் என்ற நிலை ஏற்படும்பொழுது இதைச் செய்ய வேண்டும். இதைத் தவிர கடிதப் போக்கு வரத்து மூலம் கல்வி பயிலுகின்ற திட்டம் சென்ற இரண்டு ஆண்டுக் காலமாக மதுரை பல்கலைக்கழகத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதை மாநிலத்தில் எங்கிருப்பவர்களும் பயன்படுத்திக்கொள்ள நல்ல வாய்ப்பு இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சட்டப்படிப்பு படிப்பதற்கு இப்பொழுது கஷ்டமாக இருக்கிறது என்று மாலை நேரக் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதை விரிவுப்படுத்தி மதுரை பல்கலைக்கழகத்திலும் ஏற்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

1973 மார்ச் 2]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சட்டக் கல்லூரி, சென்னையை பொறுத்தவரையில் மாலே நேரக் கல்லூரி நடைபெற்று வருகிறது. ஆனால் இப்பொழுது மதுரையில் சட்டக் கல்லூரி துவக்குகின்ற செயற்குறிப்பு இல்லே.

திரு. எஸ். முருகையன் : மாலே நேரக் கல்லூரிகளில் பெண்கள் எத்தனை பேர்கள் படிக்கிருர்கள். பெண்களுக்காக தனியாக மாலேநேரக் கல்லூரி ஏதாவது ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா? இல்லேயானுல் ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எவ்வளவு பேர் என்ற விவரக் குறிப்பு இல்லே. பெண்கள் கல்லூரிகளில் பெண்கள் படிக்கிருர்கள். எடுத்துக்காட்டாக க்வீன் மேரீஸ் காலேஜில் மாலேநேரக் கல்லூரியில் பெண்கள் தான் படிக்கிருர்கள். சில பெண்கள் கல்லூரிகள் மாலேநேரக் கல்லூரி பயிற்சி கொடுப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. நா. வீராசாமி : மதுரை பல்கலேக்கழகத்தில் இருப்பதுபோல, சென்னேயிலும் போஸ்டல் டியூஷன் நடத்துகிற செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மதுரை பல்கலேக்கழகம் நடத்துகின்ற காரணத்தினுல் சென்னேப் பல்கலேக்கழகத்தைக் கேட்ட பொழுது ஏதேனும் ஒரு பல்கலேக்கழகத்தில் முறைப்படி நடத்துவது பொருத்தமாக இருக்கும், இரண்டு பல்கலேக்கழகத்தில் கடிதப் போக்கு வரத்து மூலம் பயிற்சி அளிக்க வேண்டிய அவசியம் இல்லே, முதலில் மதுரைப் பல்கலேக்கழகம் நடத்தட்டும் என்று அவர்கள் கூறியிருக்கிருர்கள்.

புலவர் சி. பழனிச்சாமி : மாலேநேரக் கல்லூரிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து படிப்பதற்கு ஏதாவது தடை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது அரசாங்கத்தில் பணிபுரிகிறவர்களுக்குத்தான் அதில் இடம் தரப்படுகிறது. அதைப்பற்றி விதிமுறைகள் என்னிடம் இல்லே. தனிக் கேள்வி போட்டால், அதைப் பற்றி ஆராய்ந்து சொல்லப்படும்.

திரு. கே. ஏ. வகாப் : இப்பொழுது உள்ள கல்வித்தரம் குறைந்து கொண்டே வருவதாகச் சொல்லப்படுகிறது. கடிதம் மூலம் கல்வி பயின்றுல் இன்னும் தரம் குறையும் என்று நிபுணர்கள் குறிப்பிடுகிருர்கள். ஆகவே, கடிதம் மூலம் கல்வி கற்கும் முறையை ரத்து செய்வதற்கோ அல்லது நிறுத்தி வைப்பதற்கோ அரசாங்கம் யோசனே செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இது ஒரு விவாதப் பிரச்னை. தரம் எதிலே குறைந்திருக்கிறது, எந்த வகையில் குறைந்திருக்கிறது என்பதில் வல்லுனர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. ஆனால், கடிதப் போக்குவரத்து மூலம் வேறு பல பல்கலைக்கழகங்கள் பட்டங்கள் தருகின்றன. அந்தப் பட்டங்களை ஒழுங்காக நடைபெறுகின்ற கல்லூரியில் படித்துப் பெறப் படுகின்ற பட்டங்களுக்கு ஈடுஇணையாகத்தான் நாம் கருதி வருகிறோம். வட மாநிலங்களில் பல்கலைக்கழகங்கள் கடிதப் போக்குவரத்து மூலம் நடத்து கின்ற படிப்பில் சேர்ந்து தொடர்பு கொண்டு அதிலே பரிட்சை எழுதி, பட்டம் பெற்று, அந்தப் பட்டங்கள் மற்ற பட்டங்களுக்கு இணையாகக் கருதப்படு கின்றன. பல பேர் அங்கே போய் பரிட்சை எழுதுகிறார்கள். ஆகவே, தமிழகத்திலும் இப்படிப்பட்ட முறை இருக்கலாம் என்று வகுக்கப்பட்டு, இப்பொழுது நடந்துவருகிறது. அந்த ஒரு முறை மட்டும் இருந்தால், உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் நிலைமை ஏற்படலாம். ஆனால் இங்கே ஒழுங்காக நடைபெறுகிற கல்லூரிகளில் பட்டப்படிப்பு, மாலைநேரக் கல்லூரி களில் பட்டப்படிப்பு, கடிதப் போக்குவரத்து மூலம் பட்டப்படிப்பு ஆகிய மூன்று முறைகளும் இருந்து வருகின்றன.

திரு. ரா. ரா. முனுசாமி: துணைத் தலைவரவர்களே, மாலைநேரக் கல்லூரி களில் சேருவதற்கு வயது வரம்பு உண்டா? 40, 50 வயது ஆனவர்களும் மாலை நேரக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: வயதுவரம்பு எதுவும் இல்லை என்றுதான் கருதுகிறேன். தனிக் கேள்வி போட்டால் தகவல் திரட்டிக் கொடுக்கப்படும்.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: தமிழ் புலவர், வித்வான் போன்ற வகுப்புக்களுக்கு மாலைநேரக் கல்லூரிகளில் இடம் அளிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது அப்படிப்பட்ட வகுப்புகள் இல்லை.

திறந்தவெளி திரைப்பட அரங்குகள்

*206 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் திறந்த வெளி சினிமா அரங்கு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?